بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்து.ஃபா 21/10/2016

*(19 Muharram 1438 Hijri)*

## Divorce/ விவாகரத்து



## Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும் தஅவுதும் சூரா.ஃஅல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு உரையாற்றினார்.

**"(கணவன் - மனைவி ஆகிய) அவ்விருவருடைய பிரிவினை ஏற்பட்டு விடும் என்று நீங்கள் அஞ்சினால் கணவனின் உறவினர்களிலிருந்து ஒருவரையும் மனைவியின் உறவினர்களிலிருந்து ஒருவரையும் மத்தியஸ்தர்களாக ஏற்படுத்துங்கள். அவ்விருவரும் சமாதானத்தை விரும்பினால் அல்லாஹ் அவ்விருவரிடையே ஒற்றுமை ஏற்படும் படி செய்து விடுவான் நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிபவனும் நன்குணர்கிறவனாகவும் இருக்கின்றான்" (4 : 36)**

இன்றைய எனது வெள்ளிக்கிழமை குத்து.ஃபா "தலாக்" என்ற விஷயத்தின் அடிப்படையிலாகும். இஸ்லாம் திருமணத்திற்கு மிக பெரிய முக்கியத்துவம் வழங்கிக் கொள்கின்றது. திருமணம் மிக தூய்மையான ஒரு உடன்படிக்கையாக இஸ்லாம் எண்ணுகின்றது. அதனால் மிக சாதாரணமான, அடிப்படையில்லாத காரணங்களால் தலாக் செய்ய இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

என்றிருந்தும் தலாக்கிற்கு அனுமதி வழங்கின்றது. அனுமதிக்கப்பட்ட விஷயங்களில் வைத்து முற்றிலும் வெறுக்கப்பட்ட ஒன்றாகும் தலாக். அல்லாஹ் மிக வெறுப்போடு மட்டுமே அதை காண்கின்றான். ஆகவே தலாக் அனுமதிக்கப்பட்டிருப்பது, அநீதியின் எவ்வித அடையாளமும் அதில் இருக்கக்கூடாது என்ற வகையில் ஆகும். தலாக் கின் பெயரில் பொய் நாடகம் நடத்திட இஸ்லாம் ஒரு வகுப்பிலும்

அனுமதிப்பதில்லை. சிலவேளை மனைவியின் சில மாறுபட்ட பரிமாற்றங்கள் கணவருக்கு விருப்பமில்லாததால் விவாகரத்து நிகழ்கின்றது. மனைவியை தவிர்த்துக் கொள்வதற்கு கணவர் அதை ஓர் காரணமாக்கின்றார். ஆனால் இக்காரணம் மனைவியை தலாக் செய்துக் கொள்வதற்கு போதுமானதல்ல. இவ்விஷயத்தில் கணவர் விரும்பாத மனைவியின் செயல்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கிக் கொள்ளாமல் அவர் விரும்புகின்ற ஏராளமான செயல்கள் அவளிலிருக்கும் அதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும். அந்நேரம் தன் மனைவியிலிருக்கும் நற்பண்புகள் தீயதை விட விலைவாய்ந்ததென்று உணரயியலும். கூடாமல் இந்த தம்பதியர்களுக்கு பிள்ளைகளிருந்தால் அவ்விருவருடைய வேறுபாடு அப்பிள்ளைகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு தடங்கல் ஏற்ப்படுத்திக் கொள்ளும் என்று மட்டுமின்றி அப்பிள்ளைகள் யாவும் சாத்தானின் இரையாக எளிதில் பரிணமித்துக் கொள்ளவும் செய்வார்கள்.

**“இன்னும் அவர்களுடன் நீங்கள் கனிவோடு நடந்து கொள்ளுங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால் நீங்கள் ஒன்றை வெறுக்கக்கூடும் அதில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை ஏற்படுத்திவிடலாம்.”** (4 : 20)

இவ்வசனம் இஸ்லாமிக திருமண வாழ்க்கையின் முறைகளை மிக தெளிவாக விவரிக்கின்றது. ஒவ்வொருவருக்கும் தனது இணையிடம் ஒன்றுக்கொன்று சில கடமைகள் உண்டு என்பது உறுதியாகும். இவ்வசனம் நம்மை உணரச்செய்யும் மற்றொரு விஷயம் திருமண பந்தம் ஆரம்பித்துக்கொள்ள வேண்டியது அன்பின்பால் மட்டுமாகயிருக்க வேண்டும் என்பது நியாயமானதல்ல. ஒன்றுக்கொன்றான நம்பிக்கைக்கும் கனிவுக்கும் கண்டிப்பாக தம்பதியர்கள் முக்கியத்துவம் வழங்க வேண்டியதல்லவா?

திருமணம் என்பது எந்த நேரமும் துண்டித்து எறிந்துக் கொள்ளுமளவிற்கு தலை முடியால் உருவாக்கிய ஒன்றல்ல என்று நாம் உணர வேண்டும். திடீரென நிகழும் ஒரு சண்டை மூலமோ அமிதமான ஆவேசத்தாலோ அல்லது தற்காலிகமான சண்டையினாலோ தம்பதியர்களின் ஒன்றுக்கொன்றான அவநம்பிக்கையினாலோ மட்டும் திருமணவாழ்விற்கு முடிவுகட்ட கூடாது. மாறாக இந்த திருமண உடன்படிக்கையை மரணம் வரையில் நாம் ஆதரித்துக் கொள்ளவும் மதித்துக் கொள்ளவும் வேண்டும்.

திருமண வாழ்க்கையை வேர்படுத்திக் கொள்ளலாம் என்றிருந்தாலும் விவாகரத்துக்கு அனுமதி வழங்கி கொள்வது, வாழ்க்கை முற்றிலும் முன் செல்லயியலாத வகையில் பரிணமித்துவிடவும் ஒரு வகையிலும் பந்தங்களை சரிசெய்ய இயலாமல் வரும் பொழுதுமாகும். அவர் அவளின் ஒரு தன்மையில் திருப்தியில்லாமல் இருக்கலாம் ஆனால் மற்றொரு விஷயத்தில் அவருக்கு அவள் மிக திருப்தி அளிப்பவளாக காணலாம். அதாவது எந்த பெண்ணும் முழுமையாக மோசமானவள் அல்ல. குறைந்த அளவிலோ அல்லது பெரிய அளவிலோ நன்மை அவளில் இருக்கும். ஆகவே சிறிய விஷயங்களை முன்வைத்து விவாகரத்தில் சென்றுவிடாதீர்கள். காரணம் எவரும் முழுமை பெற்றவர்களல்ல.

ஒன்றுக்கொன்றான ஆலோசனை வேற்றுமையின் பெயரில் விவாகரத்து என்ற கருத்தையல்ல அங்கீகரித்துக்கொள்ள வேண்டியது. மாறாக திருமண பந்தத்தை பாதுகாத்துக் கொள்வதற்கும் அதை ஆற்றல்படைத்து கொள்வதற்குமான வழிகளும்

நாம் தேடிக்கொள்ள வேண்டும். ஒன்றிணைத்துக் கொள்வதற்கான அனைத்து வழிகளையும் நாம் தேட வேண்டும். ஏனெனில் ஒரு நம்பிக்கையாளரின் முன் பல்வேறு வழிகளை இஸ்லாம் திறந்திடுகின்றது.

1) **தம் மனைவிக்கு அறிவுரை வழங்கவேண்டும்.**
2) **பிறரின் அறிவுரைகளைத் தேடிக் கொள்ள வேண்டும்.**
3) **ஒரு மத்தியஸ்தரை கண்டு கொள்ள வேண்டும்.**
4) **அல்லது தொடர்புடைய குடும்பங்களின் ஒரு சங்கம், விஷயத்தை கலந்தாலோசிக்க வேண்டும்.**

இவை இஸ்லாம் மிக அதிகமாக ஊக்குவிக்கும் வழிகளாகும்.(திருகுர்ஆன் 4:36 பாருங்கள்)

மனைவியும் கணவனும் அவர்களின் பிரச்சனைகளை மத்தியஸ்த்த குழுவின் முன் சமர்பித்துக் கொள்ள வேண்டும் என்று திருமறை கூறுகின்றது. ஏதேனும் சிறிய பிரச்சனையின் பெயரில் தங்களின் மக்களை விவாகரத்தின் பால் கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகள் இன்று சில பெற்றோர்கள் கைகொள்கின்றனர். அவர்கள் இறைபோதனைகளுக்கு முன்னுரிமை வழங்குவதில்லை. இந்த நடவடிக்கை சரியானதுதானா என்று அவர்கள் சிந்திக்க வேண்டும். பெண் சுத்தமான காலத்தில் தானே இருக்கின்றாள் என்பதையும் கவனிக்காமல் இஸ்லாமிக போதனைகளுக்கு எதிராக விவாகரத்துக் கூறிக் கொள்கின்றனர்.

தூய தூதர்(ஸல்) வின் வாழ்க்கை கட்டத்தில் அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அவர்கள் தனது மனைவியை அவளின் மாதவிடாய் கட்டத்தில் விவாகரத் செய்தார். அன்னாரின் தந்தை உமர்(ரலி) அவர்கள் இதைக்குறித்து தூதர்(ஸல்) விடத்தில் வினவினார். அப்பொழுது தூதர்(ஸல்) அவர்கள் பதிலளித்ததாவது அவரிடம் கட்டளையிடுங்கள் (உங்கள் மகனிடத்தில்) அவளை திரும்பபெறவும் மேலும் அவள் சுத்தமாகும் வரையில் காத்திருக்கவும். பின்னர் அவளின் அடுத்த மாதவிடாய் வரையில் காத்திருக்கவும் பின்னர் அவள் சுத்தமாகட்டும் அதற்கு பிறகு அவளை தன்னிடம் வைத்துக் கொள்ள அவர் விரும்பினால் அவ்வாறு செய்யட்டும். அதல்ல விவாகரத்து செய்ய விரும்பினால் உடலுறவில் ஏற்படுவதற்கு முன்னே விவாகரத்து செய்து கொள்ளலாம். விவாகரத்துக்கு அல்லாஹ் அளித்திருக்கும் காலநேரம் இவ்வாறாகும் (புகாரி முஸ்லீம்)

ஆனால் கணவர் இறைசட்டங்களுக்கு எதிராகயிருந்தால் குற்றம் கூறவேண்டியது அவரை மட்டுமாகும். பெண் மாதவிடாயிலிருக்கும் பொழுதும் கணவன் தலாக் செய்தால் கூட அந்த தலாக்கும் நிலைநிற்பதாகும்.

அல்லாஹ் அவனது கருணையால் கணவனை வற்ப்புறுத்துகின்றான். விவாகரத்து விஷயத்தில் அவரும் அவரது மனைவிக்கும் ஒரு கால நேரம் அனுமதிக்கின்றான். களங்கமற்ற மனதோடும் பாகமான உள்ளத்தோடும் சிந்தித்து தீர்மானத்தில் எட்ட வேண்டும். முதல் தலாக் கூறியப் பிறகு மூன்று மாதவிடாய் காலம் வரையில் ஒன்றிணைந்து விடுவதற்கான நேரம் திறந்திருக்கின்றது.

இஸ்லாமிக சட்டம் ஏராளமான வாய்ப்புகள் நமக்கு வழங்கியிருந்தும் பெரும்பாலான மக்கள் அந்த சட்டத்தை கடைபிடிப்பதில்லை. அவர்கள் ஒரே நேரத்தில்

மூன்று தலாக்கையும் சேர்த்தே கூறிவிடுகின்ற நடவடிக்கையுமாக முன்செல்கின்றனர். அதாவது மூன்று தவணையாக தலாக் கூறுவதற்கு பதிலாக ஒரே நேரத்தில் அதை கூறி கொண்டு திரும்ப பெற இயலாத அளவிற்கு விஷயத்தை முறிவுபடுத்துகின்றனர். அல்லாஹ்வின் அருள்கள் மீது பழிபோட்டு விடுகின்ற செயல்கள் அல்லவா அது வயிலாக அவர்கள் செய்கின்றார்கள்?

நம் சமுதாயத்தில் அனுதினம் விவாகரத்தின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்பது எவருக்கும் மறுத்துக் கொள்ளவோ மறைத்துக் கொள்ளவோ இயலாது. குடும்ப பந்தங்கள் இன்று வெடித்து சிதறிக் கொண்டிருக்கின்றது. திருமண பந்தத்தை முடித்துக் கொள்ள தலாக் தலாக் தலாக் என்ற மூன்று வார்த்தையை ஒரே நேரத்தில் மேலும் மேலும் கூறுவதன் வாயிலாக முடிவுகட்டுகின்றனர். தலாக் என்ற வார்த்தை இன்று ஒரு விளையாட்டாக பரிணமித்திருக்கின்றது.

ஏராளமான ஆண்களின் நாவுகளில் “தலாக்” என்றசொல் ஒரு நகைச்சுவை வார்த்தையாக மாறிவிட்டது. ஒருவேளை அவர்களின் திருமணபந்தத்தை முடிவு கட்டிட மூன்று முறை தலாக் கூறிக் கொண்டால் போதும் என்று அல்லாஹ் அவர்களிடத்தில் கட்டளையிட்டிருந்திருப்பின் அதைவிட அதிகமான தடவை அதை கூறுவோர்கள் அவர்களில் இருந்திருப்பார்கள். அதிசயம்! மதத்தின் இந்த நவீன வழியை அவர்கள் கை கொண்டப்பின் திடீரென அவர்கள் ஒன்றிணைந்து விடுவதற்கான வழியினையும் கண்டுகொள்வார்கள். நமக்கு நம்மிடமே ஒரு கேள்வியை கேட்போம். தலாக் என்ற சொல்லின் பொருளைப்பற்றி நாம் சிந்தித்ததுண்டோ? அதன் கட்டளைகளை குறித்து நாம் யோசித்ததுண்டோ? அதன் விதி முறைகளைப்பற்றி நாம் சிந்தித்ததுண்டோ? இதற்கெல்லாம் மேலாக அதன் விளைவுகளைக் குறித்து நாம் யோசித்ததுண்டோ? நொடி நேர கோபம் வழியாக உருவாகும் முட்டாள்தனம் காரணமாகவோ ஒன்றுக்கொன்றான கருத்து முரண்பாட்டு காரணமாகவே பெரும்பாலானோர்களும் தலாக் கூறிக்கொள்கின்றனர் என்பது கிடைத்த அத்தாட்சியின் அடிப்படையில் உணரயியலும். அது மனித உள்ளத்தை சந்தேகத்தின் பால் எட்ட வைப்பதன் விளைவாகவோ அல்லது அவர்களின் பௌதீக உடல் விருப்பத்தின் பலனாகவோ நிகழ்வதாகும்.

ஒரே மூச்சில் ஒரே நேரத்தில் மூன்று முறை தலாக் கூறுகின்ற நடவடிக்கையை நிச்சயமாக ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமும் இந்த எளிய இறைத்தூதரும் அதை மிக சக்தி வாய்ந்த வகையில் கண்டிக்கின்றோம். அது நேரடியான வார்த்தைகளால் **தலாக் தலாக் தலாக்** என்று கூறிக்கொண்டாலும் சரி அல்லது ஈமெயில் வழியாகவோ எஸ்.எம்.எஸ் மூலமாகவோ அல்லது மற்றேதேனும் வழியாக ஆனாலும் சரி. இந்த நடவடிக்கையாவும் திருக்குர்-ஆனின் போதனைப்படி மூன்று மாதவிடாய் காலத்தை மதிக்காமல் செய்யும் தீர்மானங்கள் ஆகும்.

“இத்தா” நடைமுறைக்கு அல்லாஹ் கட்டளை விடுத்ததை அவர்கள் மறந்து விட்டனர். திடீரென திருமண வாழ்க்கையை முடிவுகட்டிக் கொள்வதற்கான முழுமையான அதிகாரத்தை பதிலாக கொண்டு வந்தனர். அல்லாஹ்விலும் அவனது அருள் நிறைந்த கித்தாபிலும் நம்பிக்கை கொள்வோர்கள் இறைவன் இந்த வசனத்தில் கூறியிருப்பதைப் பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்

**“நபியே! நீங்கள் பெண்களைத் தலாக் சொல்வீர்களானால் அவர்களின் “இத்தா” வைக் கணக்கிட ஏற்ற வகையில் (மாதவிடாய் அல்லாத காலங்களில்) தலாக் கூறுங்கள். உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். தவிர (அப்பெண்) பகிரங்கமான மானக்கேடான காரியத்தைச் செய்தாலன்றி அவர்களை அவர்களின் வீடுகளிலிருந்து நீங்கள் வெளியேற்றாதீர்கள். அவர்களும் வெளியேறலாகாது. இவை அல்லாஹ் விதிக்கும் வரம்புகள். எவர் அல்லாஹ்வின் வரம்புகளை மீறுகின்றாரோ அவர் திடமாகத் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொள்கின்றார். இதன் பின்னரும் அல்லாஹ் ஏதாவது ஒருவழியை உண்டாக்கலாம் என்பதை அறியமாட்டீர்” (65:2)**

இஸ்லாமிக சட்டம் அங்கீகரித்துக் கொள்வதும் அனுமதி வழங்குவதும் ஒரு தலாக் மட்டுமென்றிருக்க ஒரு எச்சரிக்கை என்ற வகையில் கணவனுக்கும் மனைவிக்கும் மத்தியில் அது செயல்படுகின்றது. திரும்ப பெற்றுக்கொள்ள இயலாத விவாகரத்தில் வீழ்ந்துக் கொள்ளாமலிருப்பதற்கான முன் எச்சரிக்கை அது வழங்குகின்றது. ஒரேயொரு வார்த்தையால் ஒன்றிணைப்பின் வாசலை அடைத்து கொள்வதை நீதி என கூறயியலாது. தலாக்கிற்கு அல்லாஹ் நமக்கு அனுமதி வழங்கியிருப்பது கவலையின்றி அதை பயன்படுத்திக் கொள்வதற்காகும். தீர்க்கமான ஒரு நேரம் நமக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அது தம்பதியர்களின் நன்மைக்கும் நற்பலனுக்கும் ஆகும்.

புரிந்துக் கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம் கணவன் ஒன்றோ இரண்டோ தலாக் வழங்கி மூன்றாவது தலாக் கூறிக் கொள்வதற்கு முன் மூன்று மாதவிடாய் காலம் சென்றடைந்தால் அவர்களின் திருமணபந்தம் வேர்பட்டுவிட்டது. ஆனால் அவர்கள் இருவரும் ஒன்றிணைந்து விட ஒத்துக்கொண்டால் (மூன்று மாதவிடாய் காலத்திற்கு பிறகு) அவர் மறுபடியும் ஒன்றிணைந்து வாழ தீர்மானித்தால் அவர்களுக்கு அது செய்துக் கொள்வதற்கான உரிமை உண்டு. ஆனால் அவாகளின் நிக்காக் புதுமைப்படுத்த வேண்டும். அதாவது அவ்வகை திருமணம் மனைவிக்கும் கணவனுக்கும் இடையிலான ஒரு உள்த்துறை விஷயமாகும். அவ்வகை சூழ்நிலையில் கணவன் ஒரு தடவைக்கூட திருமண வேண்டுகோள் விடுக்க வேண்டும். மனைவியுமாக உடல்உறவில் ஏற்பட்டுக் கொள்வதற்கு முன்! அவ்வகை திருமணத்திற்கு மற்றெவரையும் அழைக்கத் தேவையில்லை. வலீமையின் தேவையுமில்லை. மனைவி ஹலாலா நிலை வழியாக செல்ல வேண்டியதுமில்லை.(காரணம் மூன்றாவது தலாக் கூறிக்கொள்ளாததால்) ஆனால் மூன்று தலாக்கும் வழங்கிக் கொண்டால் பிறகு உடனடியாக அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள அவருக்கு எந்த உரிமையுமில்லை. பிறகு அவளை தம் மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அவர்கள் ஹலாலா வழியாக கடந்துச் செல்ல வேண்டும். (அதாவது மற்றொருவருமாக அவர் திருமணமாகியப் பிறகு பின்னர் இரண்டாவது திருமணவாழ்க்கை பூர்ணமான நிலையில் எட்டிய பிறகு விவாகரத் நிகழவும் செய்தால் மட்டும்) முதல் கணவர் அவளை பிறகும் திருமணம் செய்வதற்கான ஹலால் நிலையை எட்டினார் என்று சுருக்கம்.

திருகுர் ஆனும் திரு சுன்னத்தும் நம்மை கற்பிப்பது விவாகரத்துக்கு ஆவேசம் காட்டாமல் இருக்க வேண்டும் என்றாகும். அல்லாஹ் உங்களுக்கு வழங்கியிருக்கும் காலநேரத்தை பயன்படுத்திட வேண்டும். கவலையுடையவும் வேதனையுடையவும்

வாசலை திறக்க கூடாது. சாத்தானின் பிடியில் அகப்பட்டு விடாதீர்கள். குடும்பத்தை குலைத்துக் கொள்வதற்கான வழிகளை சாத்தான் திறந்து வைத்திருக்கின்றான். ஆகவே கீழ் கூறும் விஷயங்களைப்பற்றி சிந்தியுங்கள்

1. **திருமண வாழ்க்கையை முடித்துக் கொள்வதற்கு ஆவேசத்துடன் தீர்மானங்கள் எடுக்காமல் இருங்கள்.**
2. **ஒரு நிமிட நேரகோபத்திற்கு அடிமைப்பட்டு தலாக் கூறிக்கொள்ளாதீர்கள்.**
3. **ஓன்றுக்கொன்றான கருத்து வேறுபாடுகளையும் சண்டைகளையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.**
4. **பெண்களின் பலவீனத்தை நன்கு உணர்ந்திட முயற்சியுங்கள்.**
5. **இஸ்லாம் நமக்கு கற்பிக்கும் பொறுமையை கடைபிடியுங்கள்.**
6. **நீங்கள் நல்லவர் என உறுதிப்படுத்திட நீங்கள் மிக நல்ல வகையில் பரிமாறுங்கள்.**
7. **உங்களின் மனைவியின் கோபத்தைப் பார்த்து நீங்களும் உணர்ச்சியுடன் பரிமாறிக் கொள்ளாதீர்கள்.**

இந்த நபிமொழியைக் கூட நினைவு கொள்ளுங்கள்.

அபூசைதுல் குத்ரியா(ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கின்றார். தூயதூதர் கூறினார்.

**“பெண்களிடத்தில் நீங்கள் கனிவுடன் பரிமாறுங்கள். காரணம் அவர்களை விலா எலும்பினால் படைக்கப்பட்டிருக்கின்றது. அதை நேர் ஆக்கிட நீங்கள் முயற்சித்தால் அது ஒடிந்து விடும். நீங்கள் அதை அதன் வழிக்கு விட்டு விடுங்கள் அது வளைந்ததாகவே இருக்கட்டும். ஆகவே நீங்கள் அவர்களிடம் (பெண்களிடம்) கனிவுடன் பரிமாறுங்கள்” புகாரி**

விவாகரத்தைக் குறித்த குர் ஆனின் கட்டளைகளை உணரும் பொழுது ஒவ்வொரு ஆண்களுக்கும் பெண்களுக்கும் அல்லாஹ் உதவி வழங்கட்டும் குற்றகுறைவுகள் நிகழாமலிருக்க(அக்கட்டளைகளை) இறுக பிடியுங்கள். அதில் ஒவ்வொரு அநீதியும் இறை சிம்ஹாசனத்தை அசைத்துக் கொள்பவையாகும். ஆகவே பெண்களும் ஆண்களும் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். இறை விருப்பப்படி உங்களின் உடன்படிக்கைகளை மதித்துக் கொள்ளுங்கள்.

இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
Cell: 9789180817